ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2031/39 - 2017 අගෝස්තු මස 09 වැනි බදාදා - 2017.08.09
2031/39 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**

(அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 02/2017)

சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழான பின்வரும் தீர்மானம் 2017 யூலை மாதம் 26 ஆந் திகதி இடம் பெற்ற செயலமர்வில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆர். எச். எஸ். சமரதுங்க,
செயலாளர்,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு - 01,
2017, ஓகத்து 08.

**தீர்மானம்**

வர்த்தமானியில் இத்தீர்மானம் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழ் இப்பாராளுமன்றம் தீர்மானிப்பதாவது, -

(அ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) கீழான இறக்குமதித் தீர்வைகள்- இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களின் மீது அட்டவணையின் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதங்களில் அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) ''அ'' எனும் அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழ் முன்னுரிமை வீதங்கள் விதிக்கப்படவும் செலுத்தப்படவும் வேண்டியவிடத்து அவ்வட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதங்களில் விதிக்கப்படவும் செலுத்தப்படவும் வேண்டும்.


இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(ஆ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் ''அ'' எனும் அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழுள்ள சலுகைப் பட்டியல் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக இதற்கான அட்டவணையின் பின்னிணைப்பு I இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் மாற்றீடு செய்யப்படும். இதற்கான அட்டவணையின் பின்னிணைப்பு I இன் 2 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களின் மீது அதன் 3 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள விகிதங்களின் படி இறக்குமதித் தீர்வைகள் விதிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டும்.

(இ) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) ''அ'' எனும் அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழுள்ள விலக்களிப்புப் பட்டியல் நீக்கப்படுவதுடன் அதற்குப் பதிலாக இதற்கான அட்டவணையின் பின்னிணைப்பு II இல் குறிப்பிடப்படும் ஏற்பாடுகள் மாற்றீடு செய்யப்படும். அத்துடன் இதற்கான அட்டவணையின் பின்னிணைப்பு II இல் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்கள் இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படும்.

**அட்டவணை**

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | தீர்வை வீதம் முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| **12.01** | | | **சோயா அவரை முழுமையான அல்லது உடைக்கப்பட்டவை** | | | |
| | 1201.10 | - | விதை | | 15 % | கி.கி. |
| | 1201.90 | - | பிற | | 15 % | கி.கி. |
| 12.08 | | | எண்ணெய் விதை மாவும் துவல்களும் அல்லது கொழுப் பார்ந்த பழங்கள் கடுகு நீங்கலாக | | | |
| | 1208.10 | - | சோயா அவரையின் | (PK) இலவசம் | 30 % | கி.கி. |
| | 1208.90 | - | பிற | (PK) இலவசம் | 30 % | கி.கி. |
| **39.01** | | | **ஈதைலின் பல்பகுதியங்கள் : முதன்மை வடிவங்களில்** | | | |
| | 3901.10 | - | 0.94 க்குக் குறைவான தண்ணீர்ப்பினைக் கொண்ட பொலி எதிலின் | (AP) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம்<br>(PK) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3901.20 | - | 0.94 க்குக் கூடுதலான தண்ணீர்ப்பினைக் கொண்ட பொலி எதிலின் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம்<br>(AP) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3901.30 | - | எதைலின் – வைனையில் அசற்றேற் சக பல் பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3901.90 | - | பிற | (PK இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |

*அட்டவணை - (தொடர்ச்சி)*

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| **39.02** | | | **புறோபைலின் அல்லது பிற ஒலிபீன்களின் பல் பகுதியங்கள், முதன்மை வடிவங்களில்** | | | |
| | 3902.10 | - | பொலிபுறோபைலீன் | (PK)இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம்<br>(AP) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3902.20 | - | பொலிஜசோபியுடைலின் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3902.30 | - | புறோபைலீன் பல பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3902.90 | - | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| **39.03** | | | **ஸ்ரைறீனின் பல பகுதியங்கள், முதன்மை வடிவங்களில்** | | | |
| | | - | **பொலிஸ்ரைரான்:** | | | |
| | 3903.11 | -- | விரியத்தக்கன | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3903.19 | -- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(AP) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3903.20 | - | ஸ்ரைரீன் - அக்கிறலோனைற்றல் (எஸ்ஏஎன்) சக பல்பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |

**அட்டவணை - (தொடர்ச்சி)**

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 3903.30 | - | அக்கிறலோனைற்றல் பியுட்டாடையீன் - ஸ்ரைரீன் - (ABS) சக பல்பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3903.90 | - | பிற | | | |
| | 3903.90.10 | --- | நீரினை அடிப்படையாகக் கொண்ட ஹோமோ பல்பகுதியங்களும் சக பல்பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 4 %<br>(SD) 1.5 %<br>(AP) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3903.90.90 | --- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம்<br>(AP) இலவசம் | இலவசம் | கி.கி. |
| 39.04 | | | **வைநையில் குளோரைட்டு அல்லது பிற அலசனேற்றம் ஒலிபீன்களின் பல் பகுதியங்கள் : முதன்மை வடிவங்கள்** | | | |
| | 3904.10 | - | பொலி (வைனல் குளோரைட்), ஏதேனும் பிற பொருட்களுடன் கலக்கப்படாதவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | | - | பிற பொலி (வைனயில் குளோரைட்டு) | | | |
| | 3904.21 | -- | பிளாஸ்ரிக் ஆக்கப்படாதவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3904.22 | -- | பிளாஸ்ரிக் ஆக்கப்பட்டவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3904.30 | - | வைனையீல் குளோறைட், வைனையில் அசற்றேற் சக பல்பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |

**அட்டவணை - (தொடர்ச்சி)**

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 3904.40 | - | பிற வைனைல் குளோரைட் பல்பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3904.50 | - | வைனைலிடீன் குளோரைட் பல்பகுதியங்கள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | | - | புளோரோ - பல்பகுதியங்கள்: | | | |
| | 3904.61 | -- | போலிரெற்றா புளோரோஈதைலீன் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3904.69 | -- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 3904.90 | - | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| **40.11** | | | காற்றடைத்த புதிய ரயர்கள், இறப்பர்களிலானவை | | | |
| | 4011.10 | - | மோட்டார் கார்களுக்குப் பாவிக்கும் ஒரு வகையானவை (ஸ்ரேசன் வெகன்கள் மற்றும் பந்தயக் கார்கள் அடங்கலாக) | | 30% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 210/- | ஒன்றுக்கு |
| | 4011.20 | - | பேருந்துகள் அல்லது லொறிகளில் பாவிக்கப்படும் ஒரு வகையானவை | | | |
| | | --- | 20 அங்குலங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட அளவினைக் கொண்ட சக்கர சட்டம் (றிம்) | | | |

### அட்டவணை - (தொடர்ச்சி)

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 4011.20.11 | ---- | குறியீடுகளின்றிய டயர் புறத்தோடு | | 15% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 80/- | ஒன்றுக்கு |
| | 4011.20.19 | ---- | பிற | | 15% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 80/- | ஒன்றுக்கு |
| | 4011.20.90 | --- | பிற | | 30% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 140/- | ஒன்றுக்கு |
| | 4011.30 | - | வானூர்திகளுக்குப் பாவிக்கப்படும் ஒரு வகையானவை | (SF) 5% (SD) 4.5% | 15% | ஒன்றுக்கு |
| | 4011.40 | - | மோட்டார் சைக்கிளுக்குப் பாவிக்கப்படும் ஒரு வகையானவை | | 30% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 160/- | ஒன்றுக்கு |
| | 4011.50 | - | துவிச்சக்கர வண்டிகளுக்குப் பாவிக்கப்படும் ஒரு வகையானவை | | 30% | ஒன்றுக்கு |
| | | - | பிற, ஹெரிங் எலும்பு அல்லது அதையொத்த வடிவங்களைக் கொண்டவை | | | |
| | 4011.61 | -- | வன அல்லது விவசாயத்திற்கு உபயோகிக்கும் ஒரு வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் | | 30% | ஒன்றுக்கு |
| | 4011.62 | -- | கட்டிட வேலைக்கு அல்லது கைத்தொழிலில் கையாளுகைக்கு உபயோகிக்கும் ஒரு வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் 61 செ. மீற்றரிலும் கூடாத விளிம்புகளைக் கொண்டவை | | 30% | ஒன்றுக்கு |
| | 4011.63 | -- | கட்டிட வேலைக்கு அல்லது கைத்தொழிலில் கையாளுகைக்கு உபயோகிக்கும் ஒரு வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் மற்றும் 61 செ. மீற்றரிலும் கூடிய விளிம்புகளைக் கொண்டவை | | 30% | ஒன்றுக்கு |
| | 4011.69 | -- | பிற | | 30% | ஒன்றுக்கு |
| | | - | பிற: | | | |

அட்டவணை - (தொடர்ச்சி)

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 4011.92 | -- | வன அல்லது விவசாயத்திற்கு உபயோகிக்கும் ஒரு வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் | | 30% | ஒன்றுக்கு |
| | 4011.93 | -- | கட்டிட வேலைக்கு அல்லது கைத்தொழில் கையாளுகைக்கு உபயோகிக்கப்படும் ஒரு வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள், 61 செ. மீற்றரிலும் கூடாத விளிம்புகளைக் கொண்டிராதவை | | 30% | ஒன்றுக்கு |
| | 4011.94 | -- | கட்டிட வேலைக்கு அல்லது கைத்தொழில் கையாளுகைக்கு உபயோகிக்கப்படும் ஒரு வகையான வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள், 61 செ. மீற்றரிலும் கூடாத விளிம்புகளைக் கொண்டிராதவை | | 30% | ஒன்றுக்கு |
| | 4011.99 | -- | பிற | | | |
| | 4011.99.10 | --- | தன்னியக்க முச்சக்கர வண்டிகளுக்கு உபயோகிக்கப்படும் ஒரு வகையானவை | | 30% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 150/- | ஒன்றுக்கு |
| | 4011.99.90 | --- | பிற | | 30% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 210/- | |
| 44.18 | | | **கட்டுபவர்களுக்கான பிணைப்புப் பொருட்களும், தச்சு வேலைப் பொருட்கள், அறை கொண்ட தட்டையான மரத் துண்டுகள், ஒன்றிணைக்கப்பட்ட தரைக்கப் பாவ உபயோகிக்கப்படும் தட்டைத்துண்டுகள், கூரைத் தட்டுகளும் 'ஷேக்'குகளும் உட்பட** | | | |
| | | - | தரைக்கு பாவிக்கப்படும் இணைக்கப்பட்ட தட்டைத் துண்டுகள் | | | |
| | 4418.71 | -- | பல துண்டுகளை இணைத்த சித்திர வேலைப்பாடமைந்த நிலங்களுக்கானவை | | | |
| | 4418.71.10 | --- | இறப்பர் மரத்திலானவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | 30% | கி.கி. |
| | 4418.71.20 | --- | மூங்கில்களிலானவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | இலவசம் | கி.கி. |

அட்டவணை - (தொடர்ச்சி)

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 4418.71.90 | --- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | 30% | கி.கி. |
| | 4418.72 | -- | பிற, பல துண்டுகளை இணைத்த சித்திர வேலைப்பாடமைந்த நிலங்களுக்கானவை | | | |
| | 4418.72.10 | --- | இறப்பர் மரத்திலானவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | 30% | கி.கி. |
| | 4418.72.20 | --- | மூங்கில்களிலானவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | இலவசம் | கி.கி. |
| | 4418.72.90 | --- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | 30% | கி.கி. |
| | 4418.79 | -- | பிற | | | |
| | 4418.79.10 | --- | இறப்பர் மரத்திலானவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | 30% | கி.கி. |
| | 4418.79.90 | --- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | 30% | கி.கி. |
| | 4418.90 | - | பிற | | | |
| | 4418.90.10 | --- | மூங்கில்களிலானவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | இலவசம் | கி.கி. |
| | 4418.90.90 | | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 5% | 30% | கி.கி. |

## அட்டவணை - (தொடர்ச்சி)

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| **72.07** | | | **குறையாக முடித்த பொருட்கள், இரும்பின் அல்லது கலப்பற்ற உருக்கின்** | | | |
| | | - | நிறைக்கு 0.25 % இற்குக் குறைவான காபனைக் கொண்டவை: | | | |
| | 7207.11 | -- | கனத்தின் இரு மடங்கிற்குக் குறைவான அகல அளவினைக் கொண்ட நீள்சதுர குறுக்கு வெட்டு முகங்களைக் கொண்ட (இதில் சதுரங்களும் உள்ளடங்கும்) | | | |
| | 7207.11.10 | --- | சிறு உலோகக் கட்டை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 7207.11.90 | --- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 7207.12 | -- | பிற, நீள்சதுர குறுக்குவெட்டு முகங்களைக் கொண்ட (சதுரங்கள் தவிர்ந்த) | | | |
| | 7207.12.10 | --- | சிறு உலோகக் கட்டை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 7207.12.90 | --- | பிற | (IN) இலவசம்<br>(PK) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 7207.19 | -- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 7207.20 | - | நிறைக்கு 0.25% மேலான காபனைக் கொண்ட | | | |

**அட்டவணை - (தொடர்ச்சி)**

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 7207.20.10 | --- | சிறு உலோகக் கட்டை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 7207.20.90 | --- | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| **72.24** | | | **பிற கலப்பு உருக்குப் பாளங்கள் அல்லது பிற முதன்மை வடிவங்களில் பிற கலப்பு உருக்குகளினாலான குறை முடிப்புப் பொருட்கள்** | | | |
| | 7224.10 | - | பாளங்களும் பிற முதன்மை வடிவங்களும் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| | 7224.90 | - | பிற | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | கி.கி. |
| **73.08** | | | **முடிவுற்ற அமைப்புகள் (தலைப்பு 94.06 இன் கீழ் வரும் முன்னணைவுக் கட்டங்களினைத் தவிர்ந்த) அதன் பாகங்கள். உதாரணமாக பாலங்களும், பாலப்பகுதிகளும் பூட்டு வாயிற் கதவுகளும் கோபுரங்களும் பின்னப்பட்ட கப்பற் பாய் மரங்கள், கூரைகள், கூரைச் சட்டக் கோவைகள், கதவுச் சட்டங்கள், ஜன்னல் சட்டங்கள், இழுத்து மூடிகள், சிறு நுண்வரிசைத் தொகுதிகள், தூண்களும் சிறு தூண் களும் இரும்பினால் அல்லது உருக்கினாலானவை. தகடுகள், நீண்ட துண்டுகள், பாளங்கள், கோணங்கள், வடிவங்கள், வெட்டுத் துண்டுகள், குழாய்களும் அவை போன்ற பொருட்களும் அமைப்புகளுக்காக உபயோகிக் கப்படும் இரும்பினால் அல்லது உருக்கினாலானவை** | | | |
| | 7308.10 | - | பாலங்களும், பாலங்களின் பகுதிகளும் | | 30% | கி.கி. |
| | 7308.20 | - | கோபுரங்களும், பின்னப்பட்ட கப்பற் பாய்மரங்களும் | (AP) 15% | 30% | கி.கி. |

அட்டவணை - (தொடர்ச்சி)

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 7308.30 | - | கதவுகள், யன்னல்களும் அவற்றின் சட்டங்களும் கதவு களுக்கான இழுத்து மூடிகளும் | (AP) 15% | 30% | கி.கி. |
| | 7308.40 | - | ஆதாரக் கம்பளங்களும், சாரக் கம்பளங்களும், மூடிக் கொள்வதற்கும் அல்லது ஆதாரக் கம்பளங்களுக்குமான ஒத்த பொருட்களும் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம்<br>(AP) இலவசம் | 30% | கி.கி. |
| | 7308.90 | - | பிற | (AP) 15%<br>(PK) இலவசம் | 30% | கி.கி. |
| **83.09** | | | **மூல உலோகத்தினாலான அடைப்புகள், மூடிகளும் அடைப்பான்களும் (சோடா மூடிகள், புரி மூடிகள் ஊற்று அடைப்புகள் அடங்கலாக) புட்டி அடைப்புச் சுருள்கள், போத்தலின் உலோக அடைப்புகள், முத்திரை அச்சு மூடி களும் ஏனைய அடைக்கும் உபகரணங்களும்** | | | |
| | 8309.10 | - | சோடா மூடிகள் | | 15% | கி.கி. |
| | 8309.90 | - | பிற: | | | |
| | 8309.90.10 | --- | புட்டி அடைப்புச் சுருள் | | 30% | கி.கி. |
| | 8309.90.20 | --- | மூடைகளை சீல் இடுவதற்கான உருக்கினாலான ஒட்டு இணைப்புகள் | | 30% | கி.கி. |
| | 8309.90.30 | --- | உலோக கலன்களது மூடியினை முழுமையாக இலகுவாக திறப்பதற்கான மூடி திறப்பான் | | இலவசம் | கி.கி. |
| | 8309.90.40 | --- | உலோக கலன்களது மூடியினை இலகுவாக திறப்பதற்கான மூடி திறப்பான் | | 15% | கி.கி. |
| | 8309.90.90 | --- | பிற | | 15% | கி.கி. |
| **84.82** | | | **குண்டு அல்லது உருளை உராய்வு தாங்கிகள்** | | | |
| | 8482.10 | - | குண்டு உராய்வு தாங்கிகள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம்<br>(GT) இலவசம்<br>(AP) இலவசம் | இலவசம் | ஒன்றுக்கு |

அட்டவணை - (தொடர்ச்சி)

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| 85.07 | | | **மின் சேமிப்புக் கலன்கள், நீள் சதுர (சதுரம் உட்பட) அளவில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அமைந்த வேறாக்கிகளும் உட்பட** | | | |
| | 8507.10 | - | பிஸ்ரன் இயந்திரத்தை இயக்குவதற்காக உபயோகிக்கப்படும் ஒரு வகை ஈய அசிட் | | | |
| | 8507.10.10 | --- | உபயோகிப்பதற்கு ஆயத்தமான நிலையிலும் ஈய அசிட்களுடன் நிரப்பப்பட்டு முத்திரையிடப்பட்ட மின் சேமிப்புக் கலன்கள் | | 30% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 150/- | ஒன்றுக்கு |
| | 8507.10.90 | --- | பிற | | 30% அல்லது ஒரு கி.கி. இற்கு ரூபா 150/- | ஒன்றுக்கு |
| 85.11 | | | **மின் அழற் பொறிகள் அல்லது தொடக்கப்படும் கருவிகள் இவை எரி பற்றல் அழல் பொறிகளுக்காக பாவிக்கப்படுபவையாகும். (உதாரணம்: அழற் பொறிக்காந்தம், காந்த டைனமோ, எரிபற்றல் சுருட்கள் பொறிச் செருக்கிகள், ஒளிர்வுச் செருக்கிகள், தொடக்கம் மோட்டார்கள்) பிறப்பாக்கிகள் (உதாரணம்: டைனமோ, மாற்றுக் கருவிகள்), அப்படியான இயந்திரங்களின்பால் பயன்படுத்தப்படும் வகையைச் சேர்ந்த வெட்டுமின் பொறி உபகரணங்கள்** | | | |
| | 8511.10 | - | பொறிச் செருக்கிகள் | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) 5%<br>(SD) 4.5% | இலவசம் | ஒன்றுக்கு |
| 87.05 | | | **பிரதானமாக நபர்களை அல்லது பொருட்களைக் கொண்டு செல்லுவதற்காக வடிவமைக்கப்பட்டவை தவிர்ந்த பிற நோக்கங்களுக்கான மோட்டார் வாகனங்கள் (உதாரணமாக: சீர்குலைந்த இயந்திரப்பொறி லொறிகள், பாரம் தூக்கும் பொறிகள், தீ அணைக்கும் வாகனங்கள், கொங்றீட் கலக்கும் லொறிகள், வீதி சுத்திகரிக்கும் லொறிகள், தெளிக்கும் லொறிகள், இடம்பெயர் ஊடுகதிர் அலகுகள்)** | | | |

*அட்டவணை - (தொடர்ச்சி)*

| இ.ப.த. இல. (1) | இ.மு. குறியீடு (2) | | விபரம் (3) | தீர்வை வீதம் முன்னுரிமை (4) | முன்னுரிமை (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | 8705.90 | - | பிற | | | |
| | | --- | கொங்றீட் கலவையினை மேலெழச் செய்யும் விசைக் குழாயுடைய (பம்ப்) ட்றக்குகள் | | | |
| | 8705.90.31 | --- | பத்து வருடங்களுக்கு மேற்படாதவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | ஒன்றுக்கு |
| | 8705.90.32 | --- | பத்து வருடங்களுக்கு மேற்பட்டவை | (PK) இலவசம்<br>(IN) இலவசம்<br>(SF) இலவசம்<br>(SD) இலவசம் | இலவசம் | ஒன்றுக்கு |

## பின்னிணைப்பு I

விலக்களிப்புப் பட்டியல் (இறக்குமதிகள்)

| *வகை* 1 | *விபரம்* 2 | *தீர்வை விகிதம்* 3 |
|---|---|---|
| 01 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இறக்குமதி செய்யப்பட்ட, இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரணங்களைப் பொதியிடுவதற்கான கொள்கலன்கள் | 7.5% |
| 02 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இறக்குமதி செய்யப்பட்ட, அழகு சாதனப் பொருட்களைப் பொதியிடும் நோக்கத்திற்கான கொள்கலன்களும் மற்றும் அவற்றினது பாகங்களும் | 7.5% |
| 03 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இறக்குமதி செய்யப்பட்ட, மின்சார மோட்டார்களை தன்னியக்கமாக சுழற்ற பாவிக்கப்படும் எனாமல் பூசப்பட்ட செப்புக் கம்பி | 7.5% |
| 04 | கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இறக்குமதி செய்யப்பட்ட, முகம் பார்க்கும் கண்ணாடி உற்பத்திக்காகப் பாவிக்கப்படும் கண்ணாடியின் பின்புறத்தில் பூசப்படும் தேமோசெற்றிங் வர்ணங்கள் | 15.0% |

## பின்னிணைப்பு II

அரசிறை பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்திற்கு அமைவாக விலக்களிப்புப் பட்டியல் (இறக்குமதிகள்)

கீழே விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் அல்லது நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்படுவதும் மற்றும் அந்நோக்கம் மற்றும் நோக்கங்களுக்காகவே இறக்குமதி செய்யப்பட்டதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் திருப்திப்படும் பட்சத்திலும் திறைசேரிச் செயலாளரிடமிருந்து அல்லது திறைசேரிச் செயலாளரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அத்தகைய பிற அதிகார சபையிடமிருந்து அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள பட்சத்திலும் பின்வரும் பொருட்கள் வகையானது இறக்குமதித் தீர்வையிலிருந்து விலக்களிக்கப்படும்.

01. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 107 'அ' பிரிவின் கீழ் நிதியமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளினால் வரையறுக்கப்பட்ட பயணிகள் பொதி.

02. ஐக்கிய நாடுகள் ஒன்றியம் அல்லது அதனது சிறப்பு முகவராண்மை ஒன்றினால் தயாரிக்கப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட கல்வி, விஞ்ஞான அல்லது கலாசார இயல்புகளையுடைய திரைப்படங்கள் உரிய நிரல் அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

03. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பிணையின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட தொழில் சார்ந்த மற்றும் விஞ்ஞான ரீதியிலான மற்றும் கல்விப் போதனாப் பொருட்களது தற்காலிக இறக்குமதி.

04. கலை, இலக்கியம், விஞ்ஞான, விளையாட்டுத் திறமைக்காக, பொதுச் சேவைக்காகப் போற்றத்தக்க சாதனை அல்லது நடத்தையின் பதிவாக எவருக்கேனும் வெளிநாட்டில் வழங்கப்பட்டு அந்நபரினால் அல்லது அவரின் சார்பில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் நிரல் அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் உரிய ஆவணங்கள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு முன்வைப்பதன் மூலம்.

05. சுகாதார அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்கீழ் இறக்குமதி செய்யப்பட்ட மருந்தாக்கல்களைத் தயாரிப்பதற்கான மூலப் பொருட்களும் பொதியிடல் பொருட்களும்.

06. ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய முறைகளுக்காகப் பயன்படுத்தப்படுவதாக சுதேச வைத்திய அமைச்சுச் செயலாளரின் ஆலோசனையுடன் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிக்கப்பட்ட மற்றும் தயாரிக்கப்படாத மருந்து வகைகள், மருந்துகளுக்குரிய பூண்டுகள் மற்றும் பொதியிடுவதற்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் சுதேச வைத்திய அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

07. ஆயுர்வேத, சித்த மற்றும் யுனானி மூலப்பொருள் மற்றும் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மற்றும் ஆயர்வேத/மூலிகை சவர்க்காரம் மற்றும் ஆயுர்வேத/மூலிகை பற்பசை என்பன தவிர்ந்த மருத்துவ மூலப்பொருட்களை பொதி செய்வதற்கான பொதியிடல் பொருட்கள், சுதேச வைத்திய அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கமைய இறக்குமதி செய்யப்பட்டவை.

08. கால்நடை அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கமைய இறக்குமதி செய்யப்படும் கோழி வளர்ப்புக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் கோழிக்கூடுகள், இயந்திரங்கள், பொறித்தொகுதிகள், பொருத்துகள் மற்றும் உதிரிப்பாகங்கள்.

09. சுகாதார அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கமைய சுகாதார சேவைகளது ஏற்பாட்டுக்காக இறக்குமதி செய்யப்படும் அம்பியுலன்ஸ் அடங்கலாக மருத்துவ சத்திரசிகிச்சை, பற்சிகிச்சைக்கான உபகரணங்கள், கருவிகள் மற்றும் அவற்றின் துணைக் கருவிகளும் பாகங்களும்.

10. வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட மற்றும் ஏற்கனவே இறக்குமதித் தீர்வை செலுத்தப்பட்ட மீள் இறக்குமதிப் பொருட்கள், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

11. இயற்கை அல்லது பிற அழிவுகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக கடல்கடந்த நாடுகளிலிருந்தான நபர்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து அன்பளிப்பாக பெறப்படும் இறக்குமதிப் பொருட்கள், உரிய நிரல் அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

12. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பிணையின்கீழ் இறக்குமதி செய்யப்படும் பொருட்காட்சிகள், சந்தைகள், கூட்டங்கள் மற்றும் இவை போன்ற நிகழ்ச்சிகளில் உபயோகிப்பதற்கான அல்லது இவற்றில் காண்பிப்பதற்கான பொருட்கள்.

13. திறைசேரிச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைய உற்பத்தியில் 50% அல்லது அதற்கு மேற்பட்ட பகுதியை ஏற்றுமதி செய்யும் அல்லது நேரடி ஏற்றுமதியாளர்களுக்கு விநியோகிக்கும் கைத்தொழில் நிறுவனங்களின் பிரத்தியேகப் பாவனைக்கென இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரசாதன மற்றும் உபகரணங்களை நிர்மாணிப்பதற்கான மூலப்பொருட்கள், பாகங்கள், மூலதனப் பொருட்கள் இடைநிலைப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து உபகரணங்கள்.

14. நிதியமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைய ஏற்றுமதி உள்ளீட்டு செயன்முறைத் திட்டத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகள் (மூலப் பொருட்கள், பகுதிகள், பாகங்கள்).

15. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கும் வரையறைகளுக்கும் அமைய மீன் ஏற்றுமதிக்காக இறக்குமதி செய்யப்படும் அழகு மீன்கள்.

16. இலங்கைத் துறைமுகப் பதிவேட்டில் பதியப்பட்டு அல்லது மீன்பிடி அமைச்சுச் செயலாளரினால் தரையிறக்க அனுமதிக்கப்பட்ட இலங்கைத் துறைமுகத்திலிருந்து இயங்கும் மீன்பிடிக் கலத்தில் பிடிக்கப்பட்ட மீன்கள்.

17. சர்வதேச விமான சேவையினை அமைப்பதற்கும் மற்றும் பராமரிப்பது தொடர்பில் இலங்கையிலுள்ள விமானத் துறையொன்றின் எல்லைகளுக்குள் பயன்படுத்துவதற்கென இறக்குமதி செய்யப்பட்ட உபகரணங்கள், பொருட்கள் மற்றும் விமானங்களைத் திருத்துவதற்கும் பராமரிப்பதற்குமான பாகங்கள் மற்றும் உபகரணங்கள் உரிய நிரல் அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

18. கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக இறக்குமதி செய்யப்படும் உபகரணங்கள், மருந்து மற்றும் இரசாயனப் பொருட்கள் உரிய நிரல் அமைச்சின் செயலாளரின்/உரிய பல்கலைக்கழக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

19. பாதுகாப்பான முறையில் தூக்கிச் செல்லவும் மற்றும் பொருட்களின் பாதுகாப்பிற்கும் பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்யப்பட்ட கொள்கலன்களின் முத்திரைகள் அடங்கலான கொள்கலன்கள் மற்றும் அதற்கான துணைப் பொருட்கள், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

20. சுகாதார அமைச்சினால் சிபார்சு செய்யப்பட்டு இறக்குமதி செய்யப்பட்ட வாசனைத் திரவியங்கள் மற்றும் மருந்துப் பொருட்கள் சட்டத்தின்கீழ் மருந்துப் பொருட்களாகப் பதியப்பட்டதுமான பொருட்கள், சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப் பட்டவை.

21. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துக்கு அமைய, 15,000 ரூபாவுக்கு மேற்படாத பெறுமதி மிக்க சொந்தப் பாவனைக்காக இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் (அன்பளிப்பு உட்பட).

22. சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, 50,000 ரூபாவுக்கு மேற்படாத பெறுமதி மிக்க வியாபாரத்துடன் தொடர்பான மாதிரிகளது இறக்குமதி.

23. கைத்தொழில், வர்த்தக அமைச்சுச் செயலாளரின் சிபாரிசின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய திரவத்திலான பால், மரக்கறி, குடிபானம் மற்றும் பழரசங்களைப் பொதியிடுவதற்காக இறக்குமதி செய்யப்படும் அலுமினிய உலோகத்தாள், பொலிதீன் உறை, பாதுகாப்புப் படலம் இடப்பட்ட கடதாசிகளைக் கொண்ட பொதிகளும் பல அடுக்குகளைக் கொண்ட பொதியுறைகள் அல்லது பொலித்தீன் மற்றும் எதைல் மதுசாரம்.

24. வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதியின்கீழ் பாகிஸ்தான், இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின்கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள கோட்டா எல்லைகள் வரை இறக்குமதி செய்யப்பட்ட நீண்ட வடிவமுடைய பாகிஸ்தான் அரிசி (பாஸ்மதி) மற்றும் உருளைக்கிழங்குகள்.

25. மின்சார விநியோகம் அடங்கலாக மின்சாரத்தினை வழங்குவதன் நோக்கத்திற்காக இலங்கை மின்சார சபை மற்றும் அத்துடன் துணையான கம்பனிகள், இலங்கை அரசாங்கம், அதனது அபிவிருத்திக் குழுக்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின்கீழ் சூரிய, அனல் மின்சக்தி உற்பத்தி செய்வதற்கான கருத்திட்டங்களுக்குரிய இயந்திரங்கள், பொருட்கள் மற்றும் அதற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள் மின்வலு எரிசக்தி அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்பட்டவை.

26. தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கமைய சினிமா படப்பிடிப்பு உபயோகத்திற்காக இறக்குமதி செய்யப்படும் கலைப்பொருட்கள் மற்றும் இலங்கையில் தயாரிக்கப்பட்டு மேலதிக செய்முறைக்காக அல்லது அச்சிடல்/பிரதிபண்ணல் போன்றவற்றிற்காக வெளிநாட்டிற்கு அனுப்பப்படும் சினிமாச்சுருள்கள்.

27. நிரல் அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கமைய காலணிகள் மற்றும் கைப்பை தயாரிப்புக்காக இறக்குமதி செய்யப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட, பதனிடப்பட்ட தோல்.

28. கால்நடை அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் சிபார்சிற்கமைய தேசிய பாதுகாப்பு நோக்கத்திற்காகப் படைத்தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபரினால் இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதப் படைகளால் பாவிக்கப்படும் ஆயுதங்கள், யுத்தத் தளபாடங்கள், வெடிமருந்து வகைகள், வெடிப்பொருட்கள், தொடர்பாடல் உபகரணங்கள், ஆகாய விமானங்கள், கப்பல்கள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்கள் திறைசேரிச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்டவை.

29. பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரின் சிபாரிசிற்கமைய தேசிய பாதுகாப்பு நோக்கத்திற்காகப் படைத்தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபரினால் இறக்குமதி செய்யப்பட்ட ஆயுதப் படைகளால் பாவிக்கப்படும் ஆயுதங்கள், யுத்தத் தளபாடங்கள், வெடிமருந்து வகைகள், வெடிப்பொருட்கள், தொடர்பாடல் உபகரணங்கள், ஆகாய விமானங்கள், கப்பல்கள் மற்றும் அவற்றின் உதிரிப்பாகங்கள் திறைசேரிச் செயலாளரினால் அனுமதிக்கப்பட்டவை.

30. கடற்றொழில் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கமைய கப்பற் படகு உற்பத்தியாளர்களினால் கப்பற் படகு உற்பத்திக்காக இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்கள், பொருத்துகள், உபகரணங்கள் மற்றும் பாகங்கள்.

31. விவசாய அமைச்சினது செயலாளரின் சிபாரிசின் பேரிலும் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கு இணங்கவும் இறக்குமதி செய்யப்படும் விவசாயம் மற்றும் அதனோடு தொடர்புபட்ட செயற்பாடுகளில் உபயோகிப்பதற்கான பின்வரும் சாதனங்கள், துணைப்பொருட்கள் மற்றும் அவற்றின் பாகங்கள்;

காலநிலை நிலையங்கள், பச்சை இல்லங்கள், பல்-சுரங்கப் பாதைகள், தெளிப்பான்/மூடுபனி முறைகள், துளிகளாக விழும் நீர்ப்பாசன முறைகள், பேடிகேசன் முறைகள், மண்ணில்லாமல் செடிகளை வளர்க்கும் முறைகள், மல்ச் (இளம் நாற்றுகளுக்குப் பாதுகாப்பாக தூவப்படும் வைக்கோல் போன்றவை) முறைகள், குளம் அமைக்க உதவும் நிரையிடுபவை (பொன்ட்லைனர்) மற்றும் வலையினைப் பாதுகாப்பவை.

32. கைத்தொழில், வர்த்தக அமைச்சுச் செயலாளரின் சிபார்சின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கமைய இறக்குமதி செய்யப்படும் உணவு வகைகளைப் பொதி செய்வதற்காக விசேடமாகப் பாவிக்கப்படும் உலோகத்தினாலான குவளைகள் (cans) மற்றும் மூடிகளின் (closures) மேற்பூச்சுக்காகப் பாவிக்கப்படும் மஞ்சள் மெழுகு எண்ணெய், வார்ணிஷ் வகைகள்.

33. உற்பத்தி வரி விதிக்கத்தக்க வகையில் அத்தியாயம் 87 இல் விபரிக்கப்பட்டுள்ளவாறான வாகனங்கள், இயந்திரங்களுடன் பொருத்தப்பட்ட அடிச்சட்டங்கள், பாகங்கள் மற்றும் வெட்டுத்துண்டுகள் ஆகியவற்றினது இறக்குமதி.

34. போக்குவரத்து அமைச்சின் செயலாளரது சிபாரிசின் பேரிலும் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கிணங்கவும் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் என்பவற்றினால் இறக்குமதி செய்யப்படும் மோட்டார் வாகனங்களது பாகங்களும் உதிரிப்பாகங்களும் மற்றும் இடப்பெயர்ச்சிகளும்.

35. கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் செயலாளரது சிபார்சின் பேரிலும் மற்றும் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அனுமதிக்கிணங்கவும் உள்நாட்டுப் பெறுமதி சேர்ப்பு செய்முறைக்காக அடையாளக் குறியினையுடைய டயர் தயாரிப்பாளர்களினால் இறக்குமதி செய்யப்படும் எவ்வித வரியடையாளமின்றிய பெயர் நாமமின்றிய புத்தம் புதிய டயர் காப்புகள்.

36. கால்நடை அபிவிருத்திக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கிணங்க மிருக மற்றும் கோழி உணவு தயாரிப்புகளது நோக்கத்திற்காக இறக்குமதி செய்யப்படும் சோளம், பருப்புகள் மற்றும் அரிசி தவிர்ந்த கூட்டுச்சேர்க்கை.

37. கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கிணங்க உள்நாட்டில் வீல்தகடுகளைத் தயாரிப்பவர்களால் இறக்குமதி செய்யப்படும் வெப்ப உருளைக் குழாய், வெப்ப உருளைக் கட்டி அல்லது பிற வடிவங்களுடைய குழாய் போன்ற வடிவங்களில் மேலதிக வேலைகள் செய்யப்படாத கம்பிப் பட்டைகளும் தண்டுகளும்.

38. கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் பேரில் திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரத்திற்கிணங்க, நிர்மாணிக்கப்பட்ட கட்டடக் கூறுகள் தயாரிப்பவர்களால் இறக்குமதி செய்யப்படும், ஐ பகுதிகள் (இயைபு முறைத் தலைப்பு 7216.32), எச் பகுதிகள் (இயைபு முறைத் தலைப்பு 7216.33) மற்றும் வேறு வகையில் நாகம் பூசப்பட்ட அல்லது வார்க்கப்பட்டவை (இயைபு முறைத் தலைப்பு 7212.30).

8 - 1070

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.